(மின்னஞ்சல்)

அனுப்புநர்
கூடுதல் இயக்குநர்,
நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

பெறுநர்
1. அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (சென்னை தவிர).
2. அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்,

ந.க.எண்.7234/2014/ஆர்1

நாள்.04.09.2018.

ஐயா

பொருள்: சொத்துவரி – உள்ளாட்சி அமைப்புகளில் கல்வி நிறுவனங்களுக்கு – சொத்தவரி விதிப்பு திருத்தம் – அறிவுரைகள் வழங்கியது – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு, நாள்.25.01.2018.
2. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.7234/14/ஆர்1, நாள்:15.03.2018.
3. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.7234/14/ஆர்1, நாள்:28.03.2018.
4. இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.7234/14/ஆர்1, நாள்:25.05.2018.
5. கல்வி நிறுவனங்களுக்கான சொத்துவரி விதிப்பு தொகுப்பறிக்கை, நாள்:26.06.2018.

*****

பார்வையில் காணும் அரசிதழ் வெளியீடு மற்றும் இவ்வலுவலக சுற்றறிக்கைகள் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பின்படி நகராட்சி / மாநகராட்சிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி / மாநகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள்(சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என அறிவிக்கை வெளியிடப்பட்டது.

அதன் அடிப்படையில் பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கையில் மேற்குறிப்பிட்டுள்ளவாறு கல்வி பயன்பாட்டுக் கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு தொடர்பான அளவீட்டு பணிகள் யாவும் சரியாகவும் தெளிவாகவும் நுணுக்கமாகவும்(Clarify and Precision) எவ்வித முறைகேடுகளும் இன்றி அந்தந்த நகராட்சி / மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் நகரமைப்புத் திட்ட அலுவலர் / ஆய்வாளர்களால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மேலும் 2017–18 இரண்டாவது அரையாண்டுக்குரிய கேட்பு நிர்ணயம் செய்து நாளது தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அதாவது 15.04.2018–க்குள் மேற்படி வரிவிதிப்பு பணிகள் முடிக்கப்பட வேண்டும் என அனைத்து நகராட்சி / மாநகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. எனவே 15.04.2018–ம் தேதிக்குள் மேற்படி வரிவிதிப்பு பணிகள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும் அனைத்து நகராட்சி / மாநகராட்சி ஆணையர்களும் இப்பணிகளை சிறப்பினமாக கருதி முன்னுரிமை அளித்து போர்கால அடிப்படையில் விரைந்து முடிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது, மேலும் இதுகுறித்து ஏதேனும் முறைகேடுகள் மற்றும் காலதாமதம் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீதும் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மேற்காண் அறிவுரைகளின்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து வாரந்திர அறிக்கையினை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் கடந்த 26.06.2018 அன்றைய தேதியில் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களிடமிருந்து(அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகளிடமிருந்து) மேற்படி பொருள் தொடர்பாக தொகுப்பறிக்கை பெறப்பட்டதில் திருப்பூர் மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகள் தவிர்த்து மற்ற மண்டலங்களில் உள்ள நகராட்சிகளில் கல்வி நிறுவனங்களுக்கான வரிவிதிப்பு பணிகள் (Assessment)திருப்திகரமாக நடைபெறவில்லை. பெயரளவில் அளவீடுகள் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படுகிறது.

மாநகராட்சிகளில் ஈரோடு, தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகள் தவிர மற்ற மாநகராட்சிகளில் குறைந்த அளவே அளவீட்டு பணிகளும் கேட்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வந்துள்ளது. மேலும் தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சியில் குறைவான சதவீதம் வசூலும், மற்ற மாநகராட்சிகளில் எவ்வித வசூலும் இல்லை என்பதையும் தொகுப்பறிக்கை காண்பிக்கிறது.

இப்பணிகளை சிறப்பினமாக கருதி முன்னுரிமை அளித்து போர்கால அடிப்படையில் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்ருந்தும் சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளில் எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. எனவே சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாநகராட்சி ஆணையர்களும் ஒரு வார காலத்திற்குள் மேற்படி அளவீட்டு பணிகளை முடித்து உரிய அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மற்ற மாநகராட்சிகளும் முழுமையாக மேற்படி வரிவிதிப்பு பணிகளை மேற்கொள்ளவில்லை. 2017–18 இரண்டாவது அரையாண்டுக்குரிய கேட்பு நிர்ணயம் செய்து நாளது தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் மேற்படி வரிவிதிப்பு பணிகள் முடிக்கப்பட வேண்டும் என அனைத்து நகராட்சி / மாநகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தும் நாளது வரை முழு அளவில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

எனவே15.09.2018க்குள் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கான வரி விதிப்பு பணிகள் விரைந்து முடிக்கபட வேண்டும் என்றும், கல்வி நிறுவனங்களுக்கான மொத்த கேட்பில் 50% வசூல் செய்யப் பட வேண்டும் தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அனைவரும் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும் என அனைத்து நகராட்சி / மாநகராட்சி ஆணையர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒம்/– சு. சாந்தி,
கூடுதல் இயக்குநர்

நகல்:

1) அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
2) இணை ஆணையர், கூடுதல் இயக்குநர்(S) மற்றும் கூடுதல் இயக்குநர்(A), இணை இயக்குநர்(மாநகராட்சிகள்), இணைஇயக்குநர்(தேர்தல்), அவர்களின் நேர்முக உதவியாளர்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/9/18
கண்காணிப்பாளர்.

4/9/18